மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வியை அனுமதிக்க வில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்வி ரெக்கார்டில் போகுமானால் நானும் அதைப் பற்றிக் கேள்வி கேட்க அனுமதியளிப்பீர்களா? Sir, while answering a question, the Hon. Minister has stated that one case was booked and it was withdrawn. May I know the particulars regarding the name of the accused and also the officer who booked the case and also the circumstances which led to the withdrawal of the case ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்டின் அவர்களுக்கு இதிலே தனிப்பட்ட முறையில் புகார்கள் செய்ய வேண்டுமென்றால் சொல்லுவதற்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன. அந்தப் புகார்களை எழுதித் தருவார்களேயானால் காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறார்கள், இப்படிப்பட்ட புகார்கள்தான் காவல்துறையினர் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகும்.

THIRU T. MARTIN : Sir, my question has not been answered. ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர்தான் பதில் சொல்லி விட்டாரே.

THIRU T. MARTIN : Sir, my question arose out of the answer given by the Hon. Minister. I am not ventilating a private grievance. The Hon. Minister has stated that he has withdrawn one case and I want to know the particulars of that case............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட அமைச்சருக்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளித்துவிட்டார்கள். உங்கள் கேள்விக்கு விடை வர வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. விடை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களை வற்புறுத்தவும் முடியாது.

* 588 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the number of Hotel brothel cases booked by the present Assistant Commissioner of Police, Vigilance, Madras under the Suppression of Immoral Traffic Act in Madras from the date of his assuming charge of his **present post till 27th November 1969.**

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 1 (ஒன்று).

THIRU T. MARTIN : Sir, the Hon. Minister has stated that one case which was booked under the Suppression of Immoral Traffic Act has been withdrawn. May I know the reasons for the withdrawal of that case?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இரண்டு கேள்விகளும் அநேகமாக ஒன்றுதான். சாட்சிகள் விசாரிக்கப்பட்டு ப்ரூவ் ஆகாத காரணத்தால் வித்ட்ரா செய்யப்பட்டது என்பதை அந்தளவே நான் சொல்லியிருக்கிறேன்.

1970 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) திரு. பி. வேலுசாமி அவர்கள் கொடுத்திருந்த அவையுரிமைக் கேள்வியை வற்புறுத்தாததும், அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்காததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் வேலுசாமி அவர்கள் ஒரு உரிமை பிரச்சினையை எழுப்பி 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் தேதியிட்டு அனுப்பி இருந்தார்கள். 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் தேதியிட்ட கடிதத்தில் திரு. வேலுசாமி அவர்கள் அந்த உரிமைப் பிரச்சினையை வற்புறுத்தவில்லை என்று தெரிவித்திருப்பதன் காரணமாக அதன்மீது மேல் நடவடிக்கை தேவை இல்லை யென்று தெரிவிக்கிறேன்.

3. முதலமைச்சர் கூறாததைக் கூறியதாக திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் கூறியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கையை யொட்டி கருத்தை வழங்கும் நேரத்தில் இந்த அவையில் முதலமைச்சர் அவர்கள் கூறாத ஒன்றை உறுப்பினர் அவர்கள் கூறினார்கள் என்று எடுத்துக்காட்டி அதற்கு அவர்கள் சமாதானம் அளிக்க ஒரு வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் கூறியிருந்தேன். இப்போது உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே இருக்கும் காரணத்தால் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவன் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நடந்த நிகழ்ச்சிகள் கடந்த 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் தேதியன்று நடந்த விவசாய இயக்கம் சம்பந்தப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் கோரிக்கைகளான கடன் ஒத்தி வைப்பு, கோவை மாவட்டம் சம்பந்தப்பட்டவரை மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது சம்பந்தமாக யோசனை செய்து இரண்டு கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டிருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். ஆகவே, முன்னால் நடந்ததை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டாம் ; அதை விட்டுவிடலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடந்த நிகழ்ச்சிபற்றி இந்த அவையில் கருத்துக் கூறுவதற்கில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன வாக்குறுதி கொடுத்தார்கள் என்பது அல்ல இப்போது இருக்கும் பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அன்று கூறுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரையும் அவரைச் சார்ந்த கட்சிக்காரர்களைப் பற்றியும், அந்த மாவட்டத்தில் நடந்த போராட்டம் பற்றியும் சில கருத்துக்களைக் கூறினார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே கூறாத ஒன்றைக் கூறியதாகக் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு முதலமைச்சர் அவர்கள் கூறாத ஒன்றைப் பற்றி இந்த அவையிலே எடுத்து கூறியது பற்றித்தான் உங்கள் கருத்தைச் சொல்ல வேண்டுமே தவிர,